OS No.489/2023

PW–1 –மாயழகு

த/பெ.

நாள். 04.03.2026

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1, 3, 4– ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>

1.பிரமாண பத்திரிக்கையில் நான் 2004 ஆம் ஆண்டு எனக்கு விவரங்கள் தெரியும் என்று தான் சொல்லி இருக்கிறேன் என்று சொன்னால் சரிதான். என்னுடைய வழக்குரையில் அப்படித்தான் சொல்லி இருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் நான் கிட்டத்தட்ட 19 ஆண்டுகள் கழித்துதான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தின் நாலாவது பாராவில் சின்னம்மாள் மட்டுமே கிரயம் எழுதி கொடுத்திருக்கிறார் என்றும் மற்ற பிரதிவாதிகள் ஆன 1 முதல் 4 பிரதிவாதிகள் யாரும் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்

2. 1 முதல் 4 பிரதிவாதிகளும் சொத்தை சின்னம்மாள் மோசடியாக கிரயம் செய்து கொடுத்ததாகவும் பொய் வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பாகம் யாராலும் விற்பனை செய்யப்படவில்லை என்று சொன்னால் சரி அல்ல. பிரதிவாதி ஒன்று முதல் நான்கு வரையிலானவர்கள் அவர்களுடைய பாகத்தை மட்டுமே விற்பனை செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

3. 09.12.2001 மற்றும் 30.01.2012, 03.01.2002 ஆகிய ஆகிய தேதிகளில் பஞ்சாயத்தார் முன்னிலையில் நாங்கள் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் இல்லை. அந்த ஒப்பந்தத்தில் திருப்பூர் சம்பந்தப்பட்ட சொத்துக்களை நான் வேண்டாம் என்று விளக்கி விட்டு தற்போது இந்த வழக்காடுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. இது காலம் கடந்த வழக்கு என்றும் சொன்னால் சரியல்ல.

4. திருப்பூரில் இருக்கும் சொத்துக்களை தவிர்த்து திருப்பத்தூரிலும் எனக்கு சொத்துக்கள் இருக்கிறது என்று சொன்னால் சரிதான். அந்த சொத்துக்களை பொறுத்து நான் எந்த நீதிமன்றத்திலும் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தொடரவில்லை என்றும் சொன்னால் சரிதான். இந்த வழக்கிலும் அந்த சொத்துக்களை சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். திருப்பத்தூர் மாவட்டத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் தெரியாது.

5. தற்போது நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கில் இருக்கும் தாவாசொத்தில் பிரதிவாதிகள் குடியிருந்தார்கள் என்றால் ஆமாம். ஏற்கனவே விற்பனை செய்த சொத்துக்களை மறு விற்பனை செய்து அதன் பின்பு கட்டிட வேலைகள் அங்கு நடந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். இந்த தாவா சொத்தை பொறுத்தமட்டில் அங்கு குடியிருந்த வருகிறேன் என்று நான் தான் சுவாதி இனத்தில் இருக்கிறேன் என்பதை நிரூபிக்க தானமும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் ஆமாம்.

6. தாவா சொத்தில் நான் குடி இல்லாத போது ஸ்வாதி இனத்தில் இல்லாத போது நான் தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கானது தவறான நீதிமன்ற கட்டணம் கட்டி இருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்க அந்த கட்டணத்தின் படி நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி அல்ல. நான் கேட்டிருக்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி அல்ல.

7. என்னுடைய சகோதரர்கள் ஏற்கனவே என்னை எனக்கு எதிராக திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இருந்தார்கள் என்றும் சொன்னால் சரிதான். அது 2009 நடைப்பெற்றது என்றால் சரிதான். அதன் பின்பு அந்த வழக்கு வாபஸ் பெறப்பட்டு அதற்கு பின்பு வேறு ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இன்றுவரை நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சகோதரர்கள் மாவட்ட வருவாய்

அலுவலரிடம் மனு செய்து அந்த மனு விசாரணையிலும் நான் ஆஜராகி வருகிறேன் என்றால் இல்லை.

8. ஏற்கனவே 2004 ஆம் ஆண்டிலேயே எனக்கு இந்த வழக்கு சொத்தினை விற்பனை செய்த விவரம் தெரிந்திருந்தும் 19 ஆண்டுகள் கழித்து நான் தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கு ஏற்றுக் கொள்ள தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. கட்டிடங்களை குறைவாக மதிப்பீடு செய்து இருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் தாயாரின் இறப்பு சான்றிதழ் இந்த வழக்கில் ஆவண படுத்தவில்லை என்றல் ஆமாம்.

9. என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் பொய் சங்கதிகளை சொல்லி இருப்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரி அல்ல. நான் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரி அல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.04 17:50:53 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.